இலங்கைப் புகையிரதத் திணைக்களம்

இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப தொகுதி -03 சேவை பிரிவு தொடர்பிலான ஆட்சேர்ப்புத் திட்டம் – (MT -01) கீழ் அடிப்படை தொழில்நுட்பவியலாளர் பதவிகளில் III ஆம் தர பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான பயிற்சிக் காலத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல் – 2026

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2017.09.07 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவி தொழில்நுட்பத் தொகுதி 3 இன் சேவை பிரிவிற்கான ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கமைய (MT -01), இலங்கை புகையிரதத் திணைக்களத்தில் அடிப்படை தொழில்நுட்பவியலாளர் III ஆம் தர பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான பயிற்சிக் காலத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பில் தகைமைகளை கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதி 2026.12.14 ஆகும்.

(2). இந்த திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு -03 சேவை பிரிவில் (MT -01), அடிப்படை தொழில்நுட்பவியலாளர் III ஆம் தரத்தில் கீழ்வரும் பதவிகள் தொடர்பில் நிலவும் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுகிறது.

தொடரிலக்கம்	*பதவி*	*வெற்றிடங்களின் எண்ணிக்கை*
1	அடிப்படை தொழில்நுட்பவியலாளர் (கம்பியாளர்)	16
2	அடிப்படை தொழில்நுட்பவியலாளர் (தச்சர்)	129
3	அடிப்படை தொழில்நுட்பவியலாளர்(கொத்தனார்)	69
4	அடிப்படை தொழில்நுட்பவியலாளர் (நிறம்பூசுநர்)	32
5	அடிப்படை தொழில்நுட்பவியலாளர் (தகர வேலையாளர்)	3
6	அடிப்படை தொழில்நுட்பவியலாளர்(மடிப்பு வேலை செய்பவர்)	4
7	அடிப்படை தொழில்நுட்பவியலாளர்(வார்ப்பு செய்பவர்)	14
8	அடிப்படை தொழில்நுட்பவியலாளர் (முன்னேற்றம்)	11
9	அடிப்படை தொழில்நுட்பவியலாளர்(கொல்லர்)	33
	மொத்தம்	311

குறிப்பு – தங்களால் பூர்த்தி செய்யப்பட்டுள்ள , கற்கப்பட்ட பாடநெறிகளுக்கமைய மேலே குறிப்பிடப்பட்டுள்ள 03 பதவிகள் தொடர்பில் முன்னுரிமையை வழங்கி பதவிகள் தொடர்பில் விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பு தங்களுக்கு உண்டு. அவ்வாறு விண்ணப்பித்துள்ள பதவிகளின் முன்னுரிமைக்கு ஏற்ப தங்களுக்கு நியமனங்கள் வழங்கப்படுவதுடன் எச்சந்தர்ப்பத்திலும் அம் முன்னுரிமையை மாற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்பட மாட்டாது.

(3). பதவிகளுக்கு ஏற்புடைய கடமைப்பாடுகள்

தொடர் இலக்கம்	*பதவி*	*பதவிக்கு வழங்கப்படுகின்ற கடமைகள்*
01	அடிப்படை தொழில்நுட்பவியலாளர் (கம்பியாளர்)	புகையிரத என்ஜின், பெட்டிகள் மற்றும் பயணிகள் பெட்டிகள், இயந்திரோபகரண கருவிகள் உள்ளடங்கலாக அவ் அவ் உப திணைக்களங்களுக்கு ஏற்புடைய பழுதுபார்ப்புக்களை மேற்கொள்ளல், உற்பத்தி செய்தல்,கழற்றுதல்,பொருத்துதல் , ஒன்றிணைத்தல் போன்ற அனைத்து செயற்பாடுகளின் போதும் பதவிக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல். புகையிரத சமிக்ஞை சுற்று தொடர்பில் இடப்படுகின்ற மேல் கம்பிகளை இழைத்தல் மற்றும் அக் கம்பி பாதைகளை பராமரித்தல் மற்றும் பழுதுபார்ப்புக்கள் சமிக்ஞை சுற்றுகளில் உள்ள சமிக்ஞை உபகரணங்கள் மற்றும் ஏனைய மின் உபகரணங்களின் கம்பிகளை பொருத்துதல்,பராமரித்தல் மற்றும் பழுதுபார்ப்பு . டெப்லட் சுற்றுகள் மற்றும் ஏனைய சமிக்ஞை அமைப்புகளுக்குரிய மின்கலங்களை பராமரித்தல் மற்றும் அது தொடர்பிலான பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் பாதை சுற்று பராமரிப்பு போன்ற செயற்பாடுகள்

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

தொடர் இலக்கம்	*பதவி*	*பதவிக்கு வழங்கப்படுகின்ற கடமைகள்*
02	அடிப்படை தொழில்நுட்பவியலாளர் (தச்சர்)	அனைத்து என்ஜின், பெட்டிகள் மற்றும் பயணிகள் பெட்டிகள், இயந்திரோபகரணங்களில் பராமரிப்புக்களை மேற்கொள்ளல் மற்றும் பழுதுபார்ப்புக்களை மேற்கொள்கையிலும் அலுவலக மற்றும் தொழிற்சாலைகளை நடாத்தி செல்கையில் மற்றும் அனைத்து நிர்மாண துறை சார்ந்தும் தேவையான உபகரணங்களை மற்றும் கருவிகளை செய்தல், தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை செய்தல், தளபாடங்களை உற்பத்தி செய்தல், பயணிகள் பெட்டிகளை செய்தல் மற்றும் பழுதுபார்ப்பு நடவடிக்கைகளின் பொருட்டு மர அறுக்கும் இடங்களில் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற மர அறுத்தல் , பொருத்துதல், , கண்ணாடி வெட்டல் மற்றும் பொருத்துதல் உள்ளடங்கலாக அனைத்து வகையிலுமான தச்சு வேலைகளை மேற்கொள்ளல் மற்றும் உபகரணங்களை பராமரித்தல் . அனைத்து வகையிலுமான சாரணை பிடித்தல் மற்றும் பழுதுபார்த்தல்
03	அடிப்படை தொழில் நுட்பவியலாளர் (கொத்தனார்)	புகையிரத திணைக்களத்தில் அனைத்து நிர்மாணிப்பு துறையிலும் கொத்தனார் தொடர்பிலான செயற்பாடுகள் மற்றும் புகையிரத பயணிகள் பெட்டிகளில் கீழ் தட்டில் மற்றும் மலசலகூட குழிகளில் சீமெந்து இடல் உள்ளடங்கலாக பணிக்கப்படுகின்ற வேறு கொத்தனார் தொடர்புடைய செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.
04	அடிப்படை தொழில் நுட்பவியலாளர் (நிறம்பூசுநர்)	புகையிரத என்ஜின், பெட்டிகள் மற்றும் பயணிகள் பெட்டிகள் , வாகனங்கள், இயந்திரோபகரணங்கள் மற்றும் கருவிகளுக்கும் அலுவலக தளபாடங்கள், கட்டிடங்கள் ,பாலம், சமிக்ஞை உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை கையினாலும் ஸ்ப்ரேயின் மூலமும் சரியாக நிறம் பூசுதல் மற்றும் அனைத்து விதத்திலும் நிற பூசு வேலைகளை மேற்கொள்ளுதல்.
05	அடிப்படை தொழில் நுட்பவியலாளர் (தகர வேலையாளர்)	புகையிரத என்ஜின், பெட்டிகள் மற்றும் பயணிகள் பெட்டிகள் , வாகனங்கள், இயந்திரோபகரணங்களின் பராமரிப்புக்களை மற்றும் பழுதுபார்ப்புக்களை மேற்கொள்கையில் தேவையான உதிரிபாகங்களை உற்பத்தி செய்தல், உலோக கலப்பு, ஈய கலவைகளை தயாரித்தல், காய்ச்சியுருக்கும் பொருட்களின் உதிரிப் பாகங்களை வெட்டுதல், இயந்திரகூடங்கள் மற்றும் உபகரண பராமரிப்பு, உலோக கற்களில் மற்றும் காய்ச்சியுருக்கும் பொருட்கள் முறையாக சுத்தம் செய்து பொருத்தி அச்சுக்களை தயாரித்தல், இன்னோரன்ன விதத்திலான வடிவங்களைக் கொண்ட பாகங்களை தேவையானவாறு வாயுவினால் இயங்கும் இயந்திரங்களின் மூலம் வெட்டுதல் மற்றும் தொழிற்சாலை அதிகாரிகளால் வழங்கப்படும் கட்டளைகளுக்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
06	அடிப்படை தொழில் நுட்பவியலாளர் (மடிப்பு வேலை செய்பவர்)	பயணிகள் பெட்டிகள் மற்றும் அலுவலக கதவுகள்,என்ஜின்களின் இருக்கைகளை குசன் செய்தல், பயணிகள் பெட்டிகள் மற்றும் அலுவலக திரைச்சீலைகள் மற்றும் சமிக்ஞை கொடிகளில் தையல் வேலைகள் மற்றும் கட்டில்கள் மற்றும் கதிரைகளை குசன் செய்தல்
07	அடிப்படை தொழில் நுட்பவியலாளர் (வார்ப்பு செய்பவர்)	புகையிரத பாதை,பாலங்கள் மற்றும் கட்டிடங்களை பழுதுபார்க்கையில், புகையிரத இயக்கத்திற்கு தேவையான என்ஜின் பெட்டிகள் மற்றும் பயணிகள் பெட்டிகள், இயந்திரோபகரண பராமரிப்புக்கு தேவையான உதிரிப் பாகங்களை உற்பத்தி செய்தல். உற்பத்திக்கு ஒத்துழைப்பு வழங்கல் ,இயந்திரோபகரணங்களை சுத்தமாக வைத்திருத்தல், அவ் ஆவணங்களை களஞ்சியப்படுத்தி வைத்தல்,வார்ப்பிற்கான அச்சுக்களை செய்தல், சுத்தம் செய்தல், உலோகங்களை சூடாக்குதல், ஊற்றுதல், இயந்திரோபகரணத்திற்கு தேவையான எண்ணெய், கிரீஸ் போன்றவற்றை இடல் போன்ற அனைத்து வகையிலுமான பராமரிப்பு நடவடிக்கைகள்
08	அடிப்படை தொழில் நுட்பவியலாளர் (கொல்லர்)	
09	அடிப்படை தொழில் நுட்பவியலாளர் (முன்னேற்றம்)	புகையிரத என்ஜின் பெட்டிகள் மற்றும் பயணிகள் பெட்டிகள் , வாகனங்கள், இயந்திரோபகரணங்களின் பராமரிப்புக்களை மற்றும் பழுதுபார்ப்புக்களை மேற்கொள்ள தேவையான உதிரிப்பாகங்கள் மற்றும் மூலப்பொருட்களை கட்டளையிடுதல் மற்றும் வழங்கல் செயற்பாட்டினை கண்டறிந்து ஏற்புடைய பிரிவுகளோடு தொடர்புகளை பேணிச் செல்வதன் ஊடாக அச் செயற்பாடுகளில் செயற்திறனை உயர்த்துதல்

(4). பயிற்சி காலப்பகுதிக்கு இணைத்துக் கொள்வதற்கான தகைமைகள்

4.1 கல்விசார் தகைமைகள்:

a. சிங்களம்/தமிழ்/ஆங்கிலம், கணிதம் மற்றும் ஏதேனும் வேறு இரு பாடங்களில் திறமை

சித்திகளுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் க.பொ.த.(சா./தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(துறைக்கு ஏற்புடைய NVQ03 அல்லது அதற்கு மேலான தகைமைகளை பெற்றிருக்கும் உத்தியோகத்தர்கள் மேற்கூறிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களாக கருதப்படுவர்.)

Gazette.lk AMBITIONS REALIZED

4.2 தொழிற்சார் தகைமைகள்

பதவிப் பெயர்	*தொழிற்சார் தகைமைகள்*	*பயிற்சிக் காலம்*
அடிப்படை தொழில்நுட்பவியலாளர்(கம்பியாளர் அடிப்படைதொழில்நுட்பவியலாளர். (நிறம்பூசுநர்) அடிப்படை.தொழில்நுட்பவியலாளர்(தகர வேலையாளர்) அடிப்படை தொழில்நுட்பவியலாளர் (மடிப்பு வேலை செய்பவர்) அடிப்படை தொழில்நுட்பவியலாளர் (வார்ப்பு செய்பவர்) அடிப்படை தொழில்நுட்பவியலாளர் (முன்னேற்றம்) அடிப்படை தொழில்நுட்பவியலாளர் (கொல்லர்)	மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத NVQ 03/04 மட்டத்தில் தொழில்நுட்ப பாடநெறியினை கற்று சான்றிதழினை பெற்றிருக்கும் நபராக இருத்தல் வேண்டும்	01 வருடம்
அடிப்படை தொழிநுட்பவியலாளர் (தச்சர்) அடிப்படை தொழிநுட்பவியலாளர் (கொத்தனார்)	அடிப்படை தொழில்நுட்பவியலாளர் (தச்சர் மற்றும் கொத்தனார்) பதவிகளுக்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 06 மாதத்திற்கு குறையாத NVQ 03/04 மட்டத்தில் தொழில்நுட்ப பாடநெறியினை கற்று சான்றிதழினை பெற்றிருக்கும் நபராக இருத்தல் வேண்டும்	

4.3 அனுபவம்-

ஏற்புடையதல்ல

4.4 உடற்சார் தகைமைகள்

I. அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிவதற்கும் பதவியில் கடமையினை மேற்கொள்ளவதற்கு போதியளவான உடல் மற்றும் உளசார் பொருத்தப்பாட்டினைக் கொண்டிருப்பதோடு புகையிரத நிபந்தனைக் கோவையில் காட்டப்பட்டுள்ள கண் பார்வை அளவினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

4.5 வேறு தகைமைகள்

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. அனைத்து விண்ணப்பதாரிகளும் சிறந்த நன்னடைத்தையை கொண்டிருத்தல் வேண்டும்.

iii. பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகைமைகளும் விண்ணப்பக் கோரல் அறிவித்தலில்/ வர்த்தமானியில்/இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பக் கோரலின் இறுதித் திகதியான 2026.12.14 ஆம் திகதிக்கு அனைத்து வகையிலும் நிறைவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

4.6 வயதெல்லை

1. விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதித் தினத்திற்கு 18 வயதிற்கு குறையாத வகையிலும் 45 வயதினை விஞ்சாத வகையிலும் இருத்தல் வேண்டும்

(5). ஆட்சேர்ப்பு செய்வதற்கான முறைமை

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளைஎழுத்து மூல பரீட்சை மற்றும் தகைமைகளை மதிப்பிடும் மதிப்பீட்டு நேர்முக பரீட்சைக்கு உட்படுத்தி எழுத்து மூல பரீட்சை மற்றும் தகைமைகளை மதிப்பிடும் மதிப்பீட்டு நேர்முக பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மொத்த புள்ளிகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்டவர்களின் திறமை முறைக்கமைய மற்றும் நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கமையவும் முதலில் ஒரு வருட பயிற்சி கால எல்லைக்கு இணைத்துக் கொள்ளப்படுவர். சமமான புள்ளிகளை பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிட எண்ணிக்கையை விஞ்சி காணப்படும் சந்தர்ப்பத்தில் அவ் வெற்றிட எண்ணிக்கையை நிரப்புவது தொடர்பிலான தீர்மானம் நடைமுறை விதிக் கோவையின் 92 ஆவது பந்தியின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய தீர்மானிக்கப்படும்.

பயிற்சி இறுதியில் எழுத்து மற்றும் பிரயோக பரீட்சைக்கு முன்வைக்கப்பட்டு தேர்ச்சி பெற்றவர்கள் அடிப்படை தொழில்நுட்பவியலாளர்கள் 111 ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர். முதல் முறை பயிற்சி நிறைவு பரீட்சையில் தேர்ச்சிடையாதவர்களுக்கு மீண்டும் பயிற்சி நிறைவு பரீட்சை தொடர்பில் தோற்றுவதற்கு 02 சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதோடு அதில் தேர்ச்சிடையாதவர்களின் சேவை முடிவுறுத்தப்படும்.

(6). சம்பள அளவுத்திட்டம்

பயிற்சி கால எல்லையின் பின் 111 தரம் தொடர்பில்

இப் பதவி தொடர்பில் பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இல் உப அட்டவணை 01 இற்கமைய ஏற்புடைய சம்பள அளவுத்திட்டம் (MT-01-2025)ரூ.50,090-10x540-11x630-10x1010-10x1190-84,ரூ.420 ஆகும். உங்களுக்கு அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய அதன் உப அட்டவணை 111 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறே சம்பளம் செலுத்தப்படும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தருக்கு அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் செலுத்தப்படும் வேறு கொடுப்பனவுகளும் உங்களுக்கு உரித்தாகும்.

பயிற்சிக் கால பகுதிக்காக

மாதாந்த கொடுப்பனவு – 2026.01.01 -2026.12.31 ஆந் திகதி வரை மாதாந்த கொடுப்பனவு ரூ.38,863.00/- ஆகும். 2027.01.01 தொடக்கம் ரூ. 40,000.00/- ஆகும்)

(7). பரீட்சைக் கட்டணம்

இப் பரீட்சை இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் புகையிரத பொதுமுகாமையாளரினால் குறிப்பிடப்படுகின்ற நிறுவனமொன்றினால் கொழும்பில் நடாத்தப்படும். பரீட்சைக் கட்டணம் ரூ.1200.00/-ஆகும். இக் கட்டணமானது விண்ணப்பங்களை ஏற்கின்ற இறுதித் திகதிக்கு முன்னர் புகையிரத பொதுமுகாமையாளரது மக்கள் வங்கியின் நகர மத்திய கிளையில் கணக்கு இல. 176-1001-090-27313 எனும் கணக்கிற்கு வரவு வைக்கப்படும் வகையில் நாட்டிலுள்ள எந்தவொரு மக்கள் வங்கி கிளைக்கும் செலுத்தப்பட்டு விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் குறித்த கூட்டினுள் கழறாத வண்ணம் ஒட்ட வேண்டும். அப் பற்றுச்சீட்டின் நகற்பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் நன்மை பயக்கும்.

1. பரீட்சை தொடர்பில் செலுத்தப்பட்ட தொகையானது எந்தவொரு காரணத்தினை முன்னிட்டும் மீள திருப்பியளிக்கப்பட மாட்டாது என்பதோடு காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது

2. பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(08). விண்ணப்பிக்கும் முறை

(அ) விண்ணப்பமானது இவ்வறிவித்தலோடு இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கமைய காணப்பட வேண்டும். அது 29.5 செ.மீ X 21 அளவிலான A4 கடதாசியின் இரு புறங்களையும் பாவனைக்கு உட்படுத்தி தயாரிக்கப்பட்டு தமது கையெழுத்திலேயே நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பத்தில் இலக்கம் 01 தொடக்கம் 2.4 வரையான தலைப்புக்கள் முதலாவது ஏனையவை அடுத்த பக்கங்களிலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பமானது

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

தயாரிக்கப்பட வேண்டும் என்பதை விசேடமாக கவனிக்கவும். இதற்காக கணினியில் தயாரிக்கப்பட்ட/தட்டச்சு இயந்திரத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பாவிக்கப்படலாம். நிரப்பப்பட்ட விண்ணப்பமானது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு ஒத்து காணப்படுகின்றதா என்பது தொடர்பில் விண்ணப்பதாரியினால் பரீசீலனை செய்யப்பட வேண்டும். மாதிரிக்கு ஒவ்வாத விண்ணப்பங்கள் மற்றும் பூரணமற்ற முறையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் என்பன எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். ஆகையால் விண்ணப்பத்தினை முன்வைப்பதற்கு முன்னர் அது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு ஒத்து காணப்படுகின்றதா எனவும் மற்றும் அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பமானது முறையாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் மீண்டும் பரீசிலித்து பார்க்க வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்தினை தயாரிக்கையில் விண்ணப்ப தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் இடப்படுதல் அத்தியாவசியமாகும்.

(இ) விண்ணப்பத்தினை புகையிரத பொதுமுகாமையாளர் அல்லது புகையிரத திணைக்களத்தின் ஏனைய உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட பெயரிற்கு அனுப்பிவைக்க கூடாது. விண்ணப்பத்தினை இடும் உறையின் இடது பக்க மூலையின் மேல் "இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப தொகுதி -03 சேவை பிரிவு தொடர்பிலான அடிப்படை தொழில்நுட்பவியலாளர் பதவிகளில் III ஆம் தர பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான பயிற்சி காலத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்தப் போட்டிப் பரீட்சை – 2026 " என குறிப்பிட வேண்டும்

(ஈ) விண்ணப்பங்கள் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2026.12.14 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.. அத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் எந்தவொரு விண்ணப்பமும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

புகையிரத பொதுமுகாமையாளர்,
புகையிரத பொதுமுகாமையாளர் அலுவலகம்,
த.பெ.355
ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

(உ) தற்போது அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பத்தினை தாம் சேவை புரிகின்ற திணைக்களத்தின் திணைக்களத் தலைவரின் ஊடாக முன்வைக்க வேண்டும்.

(09). பரீட்சைக்கு பிரவேசித்தல்

(அ) இவ் எழுத்து மூல பரீட்சை இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் புகையிரத பொதுமுகாமையாளரினால் குறிப்பிடப்படுகின்ற நிறுவனமொன்றினால் கொழும்பில் நடாத்தப்படும். வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே பரீட்சை நுழைவுச்சீட்டுக்கள் வழங்கப்படும். தமது நுழைவுச்சீட்டுக்களை முன்வைக்க தவறுகின்ற விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

(ஆ)) விண்ணப்பதாரியொருவர் தமக்கு நியமிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கு ஏற்புடைய அனுமதி நுழைவுச்சீட்டில் கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொண்டு அப் பரீட்சை மண்டபத்தில் தோற்றுகின்ற முதல் நாளே அதன் மண்டலாதிபதியிடம் கையளிக்க வேண்டும். விண்ணப்பதாரி தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட தேசிய ஆளடையாள அட்டையின் இலக்கத்தினையே பரீட்சை மண்டபத்திலும் குறிப்பிட வேண்டியதுடன் ஏதேனும் காரணத்தினால் வேறேதும் இலக்கத்தினை குறிப்பிட்டிருந்தால் அப் பரீட்சார்த்தியின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்படும், அனைத்து விண்ணப்பதாரிகளும் பின்பற்ற வேண்டிய சட்ட திட்டங்கள் இவ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பரீட்சை நடாத்துதல் தொடர்பில் புகையிரத பொதுமுகாமையாளரினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் கீழ்ப்படிய வேண்டும். அச் சட்டங்களை மீறினால் புகையிரத பொதுமுகாமையாளரினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு கீழ்படிய உள்ளாத்தப்படுவார்.

(இ) **கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்**

விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபரொருவர்/

ஓய்வு பெற்ற உத்தியோகத்தரொருவர்/பிரிவின் கிராம அலுவலர்/ சமாதான நீதவானொருவர்/சத்தியப் பிரமாணம் செய்த ஆணையாளரொருவர்/ சட்டத்தரணியொருவர்/ பிரசித்தி பெற்ற நொத்தாரிஸ் ஒருவர்/ முப்படையில் அதிகாரமுடைய உத்தியோகத்தரொருவர்/அரசாங்க அல்லது உள்ளூராட்சி சேவையில் நிரந்தர பதவியினையுடைய பதவிநிலை உத்தியோகத்தரொருவர்/பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதியொருவர்/ ஏனைய மத தலங்களுக்கு ஏற்புடைய மத குருமார்களில் கருத்திற்கொள்ளக்கூடிய பதவியினை வகிக்கும் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்

குறிப்பு - விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை பிரவேச அனுமதி பத்திரத்தினை வழங்குதல், அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமையினை பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாக கருதப்பட மாட்டாது.

(10). விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்

விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டலாதிபதிக்கு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும்.அது தொடர்பில் பின்வரும் ஏதேனுமொரு ஆவணம் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய ஆளடையாள அட்டை
2. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு
3. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்

அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாமல் பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதி செய்ய மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்கு உள்ளெடுக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்கு உட்பிரவேசித்த நொடியில் இருந்து முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாது இருத்தல் வேண்டும்.

(11). பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள்

1. இப் பரீட்சைக்கு ஏற்புடைய விதிகளுக்கமைய எவரேனும் விண்ணப்பதாரியொருவர் அதற்கு தோற்றுவதற்கு தகைமையற்றவர் என தெரிய வருமிடத்து பரீட்சைக்கு முன்னதாக அல்லது பரீட்சை நடைபெறுகையில் அல்லது அதன் பின்னர் அல்லது ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் அவரது எதிர்பார்க்கை இரத்து செய்யப்படலாம்.

11. விண்ணப்பதாரியினால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பின்னொரு காலத்தில் தவறானவை என்பது தெரியவருமிடத்து , அவர் தெரிந்தே ஏதேனுமொரு விடயத்தை மறைத்தது தெரியவருமிடத்து அவருக்கு நியமனம் வழங்குவது தொடர்பில் இன்னகத்தும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இப் பரீட்சையின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த நியமனம் இரத்து செய்யப்பட அல்லது அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கோ கீழ்படிய வேண்டும்.

(12) பரீட்சை முறைமை மற்றும் பரீட்சை மொழிமூலம்

இப் பரீட்சை இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் புகையிரத பொதுமுகாமையாளரினால் குறிப்பிடப்படுகின்ற நிறுவனமொன்றினால் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

12.1 எழுத்து பரீட்சை மூலம்

1. பரீட்சை சிங்களம், மற்றும் தமிழ் எனும் மொழிகளின் மூலம் நடாத்தப்படும் .

குறிப்பு a. விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்றுகின்ற அனைத்து வினாப் பத்திரங்களுக்கும் ஒரே மொழி மூலமே விடையளிக்க வேண்டும்

b. தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக்கு தோற்றுகின்ற பரீட்சை மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்பட மாட்டாது

12.2 எழுத்து பரீட்சையின் பெறுபேறுகள்

I. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வழங்குதல் தொடர்பில் புகையிரத பொதுமுகாமையாளரினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாவர்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

12.3 எழுத்து பரீட்சை பற்றிய விபரங்கள்

➢ பயிற்சிக் கால பகுதிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான எழுத்துமூல பரீட்சை.

தொடரிலக்கம்	*பாடங்கள்*	*காலம்*	*அதிக்கூடிய புள்ளி*	*சித்தியடையும் புள்ளி*
01	பொது அறிவு	01 மணித்தியாலயம்	100	40%
02	நுண்ணறிவுப் பரீட்சை	01 மணித்தியாலயம்	100	40%

Gazette.lk AMBITIONS REALIZED

12.4 எழுத்து பரீட்சைக்கான பாட விதந்துரை

- பொது அறிவு - இலங்கையின் சமூக,அரசியல்,கலாச்சார மற்றும் பொருளாதார சுற்றாடல் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியமான புதிய விடயங்களை போலவே விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி தொடர்பிலான விண்ணப்பதாரியின் பொது அறிவினை பரீட்சிப்பது தொடர்பிலான பரீட்சையாகும்.

- நுண்ணறிவுப் பரீட்சை- விண்ணப்பதாரியின் வாத திறமை மற்றும் விபரிப்பு ஆளுமையினையும் உடனடியாக தீர்மானத்தினை மேற்கொள்ளும் திறமையினை பற்றிய மதிப்பீட்டினை மேற்கொள்வதினை நோக்காக கொண்ட எண் ரீதியான பிரச்சினைகள் மற்றும் மொழித் தொகுதிகள் , அட்டவணைகள் போன்றவற்றை உள்ளடக்கிய படங்கள் மற்றும் வரைபுகளை பயன்படுத்தி பல்வினா முறையில் தயாரிக்கப்பட்ட வினாப் பத்திரமாகும்.

(13). தகைமையை மதிப்பிடுவதற்கான நேர்முக பரீட்சை

எழுத்து மூல பரீட்சையில் தேர்ச்சிப் பெறும் விண்ணப்பதாரிகள் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் திறமை முறைக்கமைய நிலவும் வெற்றிட எண்ணிக்கையின் இரு மடங்குக்கு சமமான விண்ணப்பதாரிகள் எண்ணிக்கையை தகைமைகள் மதிப்பீட்டும் நேர்முக பரீட்சைக்கு ஈடுபடுத்தி எழுத்துமூல பரீட்சையில் மற்றும் நேர்முக பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் திறமை முறைக்கமைய விண்ணப்பங்களை கோரும் சந்தர்ப்பத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கைக்கு ஆட்சேப்பு செய்யப்படும்.

தொடரிலக்கம்	*புள்ளிகள் வழங்கப்படுகின்ற துறைகள்*	*கவனத்திற் கொள்ளப்படுகின்ற உப துறைகள்*	*வழங்கப்படுகின்ற புள்ளிகளின் எண்ணிக்கை*	*அதிகூடிய புள்ளி*
01	மேலதிக கல்விசார் தகைமைகள்	க.பொ.த (உயர்தர) பரீட்சையில் சித்தி பெற்றுள்ள பாடங்கள் தொடர்பில் 01 புள்ளி வீதமும் திறமை சித்திகளை பெற்று சித்தியடைந்துள்ள பாடங்கள் தொடர்பில் 02 புள்ளிகள் வீதமுமாக 03 பாடங்கள் தொடர்பில் புள்ளிகள் வழங்கப்படும் (ஆங்கில மொழி மற்றும் பொது அறிவு பரீட்சையை தவிர்த்து)	6	**20**
		ஆங்கில பாடம் தொடர்பில் பெற்றுள்ள சான்றிதழ்கள்/ டிப்ளோமா பாடநெறி தொடர்பில்	5	
		கணினியறிவு தொடர்பில் பெற்றுள்ள சான்றிதழ்கள்/ டிப்ளோமா பாடநெறி தொடர்பில்	5	
		வேறொரு மொழி தொடர்பில் பெற்றுள்ள சான்றிதழ்கள்/ டிப்ளோமா பாடநெறி தொடர்பில்	4	
02	மேலதிக கல்விசார் தகைமைகள்	தொழிலுக்கு ஏற்புடைய துறையில் பெற்றுள்ள நிபுணத்துவம்' பற்றி கருத்திற்கொள்ளப்படும். (அடிப்படை தொழிற்சார் தகைமைகளுக்காக புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது)	புள்ளிகள்	

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

		துறை சார்ந்த அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 06 மாத பாடநெறி தொடர்பில்	10	30
		துறை சார்ந்த அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 01 வருட பாடநெறி தொடர்பில்	20	
		துறை சார்ந்த அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 01 வருடத்தினை விஞ்சிய பாடநெறி தொடர்பில்	30	
03	பதவிக்கு ஏற்புடைய வகையில் பெற்றுள்ள அனுபவங்கள்	பதவிக்கு ஏற்புடைய வகையில் பெற்றுள்ள அனுபவங்கள் கருத்திற் கொள்ளப்படும்	புள்ளிகள்	**30**
		03 வருட சேவை அனுபவம் அல்லது அதனை விஞ்சியதெனின் ஒரு சேவை சான்றிதழுக்கு 15 புள்ளிகள் வீதம் 02 சேவை சான்றிதழ்களுக்காக	30	
		02 வருட சேவை அனுபவம் அல்லது அதனை விஞ்சிய அல்லது 03 இனை விடவும் குறைந்ததெனின் ஒரு சேவை சான்றிதழுக்கு 10 புள்ளிகள் வீதம் 02 சேவை சான்றிதழ்களுக்காக	20	
		01 வருட சேவை அனுபவம் அல்லது அதனை விஞ்சிய அல்லது 02 இனை விட குறைந்ததெனின் ஒரு சேவை சான்றிதழுக்கு 05 புள்ளிகள் வீதம் 02 சேவை சான்றிதழ்களுக்காக	10	
		06 மாத சேவை அனுபவம் அல்லது அதனை விஞ்சிய அல்லது 01 இனை விட குறைந்ததெனின் ஒரு சேவை சான்றிதழுக்கு 2.5 புள்ளிகள் வீதம் 02 சேவை சான்றிதழ்களுக்காக	5	
04.	விசேட /வெளிவாரி திறமைகள்	விளையாட்டு/ மாணவ இராணுவ வீரர் போன்றவை தொடர்பில் பெற்றுள்ள 03 சான்றிதழ்களுக்காக 03 புள்ளிகள் வீதம் அதிகூடியதாக 03 சான்றிதழ்களுக்கு	9	**30**
		அழகியல் திறமை தொடர்பில் பெற்றுள்ள அங்கீகரிக்கப்படக் கூடிய சான்றிதழொன்றிற்காக 1 புள்ளி வீதம் அதிகூடியதாக 02 சான்றிதழ்களுக்கு 02 புள்ளிகள் வழங்கப்படும்.	2	
		சமூகசேவை நடவடிக்கைகள் தொடர்பில் பெற்றுள்ள சான்றிதழ்கள்/ அறநெறி போட்டி பரீட்சை சான்றிதழ்கள் ஒன்றிற்காக 1 புள்ளிகள் வீதம் அதிகூடியவாறு 02 சான்றிதழ்கள் தொடர்பில் புள்ளிகள் வழங்கப்படும்	2	

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

		மேற்கூறிய புள்ளிகளை வழங்குவதற்காக முன்வைக்கப்படாத வேறு வெளிவாரி திறமைகள் தொடர்பில் பெற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்படக்கூடிய சான்றித ழொன்றிற்காக	2	
5	நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் எண்ணக்கருக்கள் மற்றும் ஆளுமை	தொலைத்தொடர்பு	2	
		செவிமடுத்தல்	2	
		ஆளுமை	1	
	மொத்தம்			100

(14). பயிற்சி காலத்தின் பின்னர் 111 ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கான பரீட்சை மற்றும் செயன்முறை பரீட்சை

14.1 பயிற்சி காலத்தின் பின்னர் 111 ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கான எழுத்து மூல பரீட்சையின் பாடங்கள்

பாட விதப்புரை

தொழிநுட்பவியல் பாடம் –

பாடங்கள்	*காலம்*	*மொத்தப் புள்ளி*	*சித்தியடையும் புள்ளி*
தொழில்நுட்ப பாடம்	02 மணித்தியாலயம்	100	40%

பதவிக்கு ஏற்புடைய அறிந்துக் கொள்ள வேண்டிய அடிப்படை தொழிநுட்ப அறிவினை மதிப்பீடு செய்யக்கூடிய வகையிலான வினாக்களை கொண்டமைந்துள்ளது.

14.2 பயிற்சி காலத்தின் பின்னர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கான பிரயோக பரீட்சை

பாடங்கள்	மொத்தப் புள்ளி	சித்தியடையும் புள்ளி
தொழிநுட்பவியல் பாடம்	100	40%

பாட விதப்புரை

தொழில்நுட்பவியல் பாடம் – தெரிந்தெடுக்கப்பட்ட பாடம் தொடர்பிலான தேர்ச்சியினை மதிப்பிடுவதற்காக ஏற்புடைய தொழில்நுட்பவியல் பாடம் தொடர்பிலான கோட்பாட்டு அறிவினை பிரயோக ரீதியில் சரியாக பயன்படுத்திக் கொள்கிறாரா என்பதை மதிப்பிடுவதற்காக பிரயோக பரீட்சை நடாத்தப்படும்.

(15). சேவை நிபந்தனைகள்

இப்பதவி நிரந்தரமானது.ஓய்வூதிய உரித்துடையது

15.1 சேவை **உடன்படிக்கை தொடர்பிலான விளக்கம்**

பயிற்சி காலத்திற்கமைய ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 111 ஆம் தரத்திற்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் 111 ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 வருட காலத்திற்கு கட்டாயமாக புகையிரத திணைக்களத்தில் சேவை புரிய வேண்டும்.அவ்வாறு 10 வருட சேவை காலத்திற்கு முன்னர் நீங்காதிருப்பதாகவும் அதற்கு முன்னர் சேவையிலிருந்து நீங்கினால் புகையிரத பொதுமுகாமையாளரினால் விதப்புரைக்கப்படுகின்ற தொகையினை திணைக்களத்திற்கு செலுத்துவதற்கும் இணங்குகின்றமையையும் அரசாங்க ஊழியர் ஒருவரை பிணையாக முன்வைப்பதன் மூலம் பொறுப்பொன்றிற்கு இணைய வேண்டும்..

III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 ஆண்டுகள் கழியும் முன்னர் முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் தேர்ச்சிப் பெற வேண்டும்.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

15.2 அரசகரும மொழிகள்

அரசகரும மொழி அல்லாத மொழி மூலத்தின் ஊடாக சேவைக்கு இணைந்த உத்தியோகத்தர்களினால் உரிய அரசகரும மொழியில் தேர்ச்சியினை தகுதிகூர்காண் காலத்திற்குள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

ஏனைய அரச கருமமொழி - பொது நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதற்கு இடைநேரான சுற்றறிக்கைகளின் படி ஏற்புடைய மட்டத்தில் தேர்ச்சியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அரசாங்க சேவையின் நியமனங்கள் நிர்வகிக்கப்படுகின்ற பொதுவான நிபந்தனைகளுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இல. PSC/EST/04-01-43/08/2016 மற்றும் 2017.09.07 ஆந் திகதிய அங்கீகரிக்கப்பட்ட இலங்கை புகையிரத திணைக்களத்தில் முகாமைத்துவ உதவி தொழிநுட்ப தொகுதி 03 சேவை பிரிவிற்கான ஆட்சேர்ப்பு திட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இன்னகத்து செய்யப்படுகின்ற திருத்தங்களுக்கும் , தாபன விதிக்கோவையில் மற்றும் நிதி ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள தாபன நடைமுறை விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும் திணைக்கள கட்டளைகள் மற்றும் சட்டதிட்டங்களுக்கும் கீழ்படிய வேண்டி ஏற்படும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஏற்புடைய மருத்துவ பரீட்சையில் தேர்ச்சியடைவதற்கு மேலதிகமாக புகையிரத திணைக்கள அறிவுறுத்தற் கோவைக்கமைய பதவிக்கு ஏற்புடைய தேர்ச்சி பெறவேண்டிய விசேட கண் பரிசோதனையிலும் தேர்ச்சி பெற வேண்டும்.

16. இவ் அறிவித்தலானது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் வெளியிடப்படுவதோடு யாதேனுமொரு பொருத்தப்பாடற்ற அல்லது இணங்காத தன்மை காணப்படின், அச் சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலம் வெளியிடப்படும் அறிவித்தல் சரியானது எனக்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

17. எவ்வித வெற்றிட எண்ணிக்கையை அல்லது வெற்றிடங்கள் அனைத்தையும் நிரப்பப்படாதிருக்கவும் இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் காணப்படுமிடத்து அது தொடர்பிலான இறுதி தீர்மானத்தினை எடுப்பதும் புகையிரத பொதுமுகாமையாளருக்கு அதிகாரம் உள்ளது.

ரவிந்திர பத்மபிரிய
புகையிரத பொதுமுகாமையாளர்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED